## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேயாமாடம் எனப்படுவது ______.

   அ) வைக்கோலால் வேயப்படுவது　　ஆ) சாந்தினால் பூசப்படுவது

   இ) ஓலையால் வேயப்படுவது　　ஈ) துணியால் மூடப்படுவது

2. உரவுநீர் அழுவம் – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ______.

   அ) காற்று　　ஆ) வானம்　　இ) கடல்　　ஈ) மலை

3. கடலில் துறை அறியாமல் கலங்குவன ______.

   அ) மீன்கள்　　ஆ) மரக்கலங்கள்　　இ) தூண்கள்　　ஈ) மாடங்கள்

4. தூண் என்னும் பொருள் தரும் சொல் ______.

   அ) ஞெகிழி　　ஆ) சென்னி　　இ) ஏணி　　ஈ) மதலை

LIVEWORKSHEETS

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இயற்கை வங்கூழ் ஆட்ட – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ____________.

   அ) நிலம் ஆ) நீர் இ) காற்று ஈ) நெருப்பு

2. மக்கள் ___________ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

   அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) வங்கத்தில்

3. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ______________.

   அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல்

4. 'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____________.

   அ) பெரு + கடல் ஆ) பெருமை + கடல் இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல்

5. இன்று + ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____________.

   அ) இன்றுஆகி ஆ) இன்றிஆகி இ) இன்றாகி ஈ) இன்றாஆகி

6. எதுகை இடம்பெறாத இணை _____________.

   அ) இரவு- இயற்கை ஆ) வங்கம் - சங்கம்

   இ) உலகு - புலவு ஈ) அசைவு - இசைவு

பொருத்துக.

1. வங்கம் - பகல்
2. நீகான் - கப்பல்
3. எல் - கலங்கரை விளக்கம்
4. மாட ஒள்ளெரி - நாவாய் ஓட்டுபவன்

LIVEWORKSHEETS

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ___________.

அ) கலம் ஆ) வங்கம் இ) நாவாய் ஈ) ஓடம்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 86 14-03-2019 11:25:22

www.tntextbooks.in

2. தொல்காப்பியம் கடற்பயணத்தை ____________ வழக்கம் என்று கூறுகிறது.

அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர்

3. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி __________.

அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் _________ என அழைக்கப்படும்.
2. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ___________.
3. இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் __________ எனக் குறிப்பிடப்படும்.

பொருத்துக.

1. எரா - திசைகாட்டும் கருவி
2. பருமல் - அடிமரம்
3. மீகாமன் - குறுக்கு மரம்
4. காந்தஊசி - கப்பலைச் செலுத்துபவர்

LIVEWORKSHEETS

# மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ________.

   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்

2. பலபொருள் தரும் ஒருசொல் என்பது ___________.

   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்

3. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ___________.

   அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு

பொருத்துக.

1. இயற்சொல் - பெற்றம்
2. திரிசொல் - இரத்தம்
3. திசைச்சொல் - அழுவம்
4. வடசொல் - சோறு

LIVEWORKSHEETS

பறக்கும்.

கட்டங்களை நிரப்புக.

| வேர்ச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நட | நடந்தாள் | நடக்கிறாள் | நடப்பாள் |
| எழுது | | | |
| ஓடு | | | |
| சிரி | | | |
| பிடி | | | |
| இறங்கு | | | |

பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.


1. அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.
2. கண்மணி நாளை பாடம் படித்தாள்.
3. மாடுகள் இப்பொழுது புல் மேயும்.
4. ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.
5. நாங்கள் நேற்றுக் கடற்கரைக்குச் செல்கிறோம்.



LIVEWORKSHEETS

## குறுக்கெழுத்துப் புதிர்.

பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அறிவோம்.




**இடமிருந்து வலம்**

1. அச்சன்
2. விஞ்ஞானம்
4. பரீட்சை
10. லட்சியம்

**வலமிருந்து இடம்**

6. அபாயம்
8. தேகம்
13. சரித்திரம்
14. சத்தம்

**மேலிருந்து கீழ்**

1. அதிபர்
3. ஆச்சரியம்
7. ஆரம்பம்
12. சதம்

**கீழிருந்து மேல்**

5. ஆதி
9. உத்தரவு
11. தினம்
15. சந்தோசம்



7th Std Tamil CBSE Term 1-3 Combined 28.02.2019.indd 97 14-03-2019 11:25:23

www.tntextbooks.in

## குறிப்புகளைக் கொண்டு 'மா' என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.

1. முக்கனிகளுள் ஒன்று
2. கதிரவன் மறையும் நேரம்
3. பெருந்திரளான மக்கள் கூடும் நிகழ்வு
4. எழுத்துகளை ஒலிக்க ஆகும் கால அளவு
5. அளவில் பெரிய நகரம்

LIVEWORKSHEETS